வகையிலே, எந்த அளவுக்கு இழப்பீட்டுத் தொகை பெற்றிருக்கிறார்களோ, அதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, இந்தக் குடும்பத்தைப் பொறுத்த வரையில், வழக்கு மன்றத்துக்குச் செல்லாத வகையிலே, அதைப் பூராவும் முன்கூட்டி வழங்க அரசாங்கம் முன்வரும். அதைப் போக்குவரத்து அமைச்சருடனும், மற்றவர்களுடனும் கலந்து விரைவில் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "பேரவையின் 23-ஆவது விதியை இன்று தளர்த்தி, பேரவை அரசினர் அலுவல்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1975 ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/75)—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று நாட்கள் தான் பில்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இரண்டாவது நாள். நாளையோடு பில்களை முடிக்கவேண்டும். மொத்தம் 11 பில்கள் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு பில்லுக்கும் எத்தனை மணி நேரம் என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்று அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.